செ.வெ.எண்: 201 நாள்: 25.03.2011

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. அ. முஹம்மத்ஜான் அவர்கள் தலைமையில் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் 25.3.2013 அன்று சென்னையில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இத்துறையின் திட்டங்களுக்கென உடனுக்குடன் நிதி ஒதுக்கீடு செய்து தருவதால் அதனை மக்களிடம் சென்று சேர்ப்பதற்கு அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களும் முனைப்புடன் செயல்பட வேண்டும் எனவும், வாடகை கட்டங்களில் இயங்கிவரும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக தகுதியான நிலங்களை தேர்வு செய்யவும், அனைத்து விடுதிகளையும் மாதந்தோறும் ஆய்வு செய்து அவை நல்ல முறையில் செயல்படவும், மாணவர்களுக்கு சுகாதாரமான இருப்பிடம் மற்றும் தரமான உணவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும், அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்களும் முனைப்புடன் செயல்பட வேண்டும் என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை உரிய காலத்தில் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் எனவும், "டாப்செட்கோ" மற்றும் "டாம்கோ" மூலம் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை இன மக்களுக்கு வழங்கப்படும் கடன் உதவி திட்டங்கள் விரைவுப்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்து இத்துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்து அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்கினார்.

ஆய்வுக் கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் முதன்மைச் செயலாளர் திரு.க.அருள்மொழி, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் முதன்மைச் செயலர்/ஆணையர் திரு.அஷோக் டோங்ரே, இ.ஆ.ப., சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் திரு எஸ். தங்கசுவாமி, இ.ஆ.ப., பொதுப் பணித்துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் து...
சென்னை